# மேற்கூரை சோலார் அமைப்பதற்கான வழிமுறைகள்

TEDA-வினால் பரிந்துரைக்கப்பட்ட சோலார் டெவலப்பர்களை (Solar Developers) அணுகி மேற்கூரை சோலார் குறித்த விவரங்களை கேட்டறிதல்

↓

சோலார் டெவலப்பர் உங்களது வீட்டை பார்வையிடுதல்

↓

ஒரு ஆண்டில் பயன்படுத்தப்பட்ட மின்சார யூனிட்கள் மற்றும் சாங்க்சன்டு / காண்ட்ராக்டெட் லோடுகளை (Sanctioned / Contracted load) அடிப்படையாகக் கொண்டு தேவையான சோலார் திறனை (Solar Capacity) கணக்கிடுதல். (இதை மின் இணைப்பு ம ற்றும் மின் கட்டண விவரங்களைக் கொண்டு நுகர்வோர்களே கணக்கிடலாம்)

- ❖ மேற்கூரையில் நிழல் விழாதவாறு உள்ள இடத்தின் பரப்பளவைக் கணக்கிடுதல்
- ❖ மேற்கூரை சோலார் அமைப்பதற்கான உயரம் மற்றும் பேனல்களை பொருத்தும் இடம் போன்றவற்றை திட்டமிடல்

↓

அமைக்கப்பட வேண்டிய மேற்கூரை சோலாரின் திறனை நிர்ணயித்தல்

↓

வெவ்வேறு சோலார் டெவலப்பர்களிடமிருந்து விலை விபரம் (quotation) கோருதல்

↓

உத்திரவாதம், விலை இவற்றின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்தல் →

> சோலார் பேனல் உத்திரவாதம்: குறைந்தபட்சம் 10 வருடங்கள்
>
> இன்வெர்டர் (Inverter) உத்திரவாதம்: குறைந்தபட்சம் 5 வருடங்கள்
>
> கண்காணித்தல்: ஆன்லைன் / மொபைல்ஆப் (Online / Mobile App)
>
> பொருத்துதல் உத்திரவாதம்: குறைந்தபட்சம் 1 வருடம்
>
> வருடாந்திர பராமரிப்பிற்கான செலவுகளைக் கணக்கிடுதல் (2-வது வருடத்திலிருந்து)

↓

பகுப்பாய்வின் அடிப்படையில் தகுந்தசோலார் டெவெலப்பரை தேர்வு செய்தல்

↓

TANGEDCO வின் மின்பகிர்மான கட்டத்தில் (Grid) நெட் ஃபீட்-இன் (Net feed-in) இணைப்பிற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதா என உறுதி செய்தல் (இதற்கு சோலார் டெவெலப்பர் ஒத்துழைப்புடன் TANGEDCO-ஐ அணுகலாம்)

↓

மேற்கூரை சோலார் அமைப்பதற்கான இதரதேவைகளை பூர்த்தி செய்தல் (வயரிங், கட்டுமானம் போன்றவை)

↓

பணிகள், காலஅளவு, தேதி போன்றவற்றை தீர்மானித்தல் மற்றும் ஆவணப் படுத்துதல்

↓

சோலார் டெவெலப்பரிடம் முன்பணம் செலுத்தி ஆர்டர் செய்தல்

→ சோலார் பேனல் மற்றும் இன்வெர்டர் (Inverter) குறித்த தகவல்கள், வரைபடம், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் மற்றும் ஒப்பந்தப் படிவத்துடன் நெட் ஃபீட்-இன் இணைப்பிற்கு TANGEDCO-விடம் விண்ணப்பித்தல்

→ தேர்வு செய்யப்பட்ட டெவலப்பரிடமிருந்து பொருட்களை வாங்குதல் மற்றும் தரத்தை உறுதிசெய்தல்

↓

டெவெலப்பரைக் கொண்டு மேற்கூரை சோலார் பொருத்துதல்

↓

பொருத்தப்பட்ட மேற்கூரை சோலாரை ஆய்வு செய்ய TANGEDCO-விற்கு தகவல் அளித்தல்

↓

விண்ணப்பித்த 3 வாரங்களுக்குள் தேவையான மீட்டர்கள் TANGEDCO-வினால் பொருத்தப்பட வேண்டும் (இதற்கு நிர்ணயிக்கப்பட்ட மீட்டர் தொகை வசூலிக்கப்படும்)

↓

நெட் ஃபீட்-இன் இணைப்பு பெற்றதற்கான ஆவணங்களை TANGEDCO-விடம் இருந்து பெற வேண்டும்

---

TANGEDCO: Tamil Nadu Generation and Distribution Corporation Ltd (தமிழ்நாடு மின்சாரம் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்)

TEDA: Tamil Nadu Energy Development Agency (தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை)

[shaded box] TANGEDCO மூலம் செய்யப்பட வேண்டியவை

*ஆதாரம்:*

- *மேற்கூரை சோலார் உற்பத்தி குறித்த ஆணை, 2019*
- *சோலார் மின்சக்திக்கான பொது வீதப்படி மற்றும் தொடர்பானவை குறித்த ஆணை, 2019*
- *தமிழ்நாடு சோலார் மின்சக்தி கொள்கை, 2019*


**சிட்டிசன் கன்ஸ்யூமர் அண்டு சிவிக் ஆக்ஷன் குரூப் (சி.ஏ.ஜி.)**

புதிய எண். 246, பழைய எண். 277B, டி.டி.கே ரோடு, (ஜெ.ஜெ.ரோடு), ஆழ்வார்பேட்டை, சென்னை 600 018.

தொலைபேசி 91-44-2466 0387 / 2499 4458